மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் (02.03.2024) அன்று முதலமைச்சர் அவர்களின் 71 வது பிறந்தநாளையொட்டி சென்னை தெற்கு மாவட்டத்தில் 14 இடங்களில் நடைபெறும் மருத்துவ முகாம்களை தொடங்கி வைக்கும் வகையில், சென்னை, காமராஜபுரம் கங்கையம்மன் கோவில் அருகில் நடைபெறும் மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் துரைராஜ் மற்றம் கழக முன்னனியினர் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி கே.ஆர்.ஆனந்தன் தலைமையில்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட சுற்றுச்சூல் அணி சார்பில் மரக்கன்று நடும் விழா!

டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - ஆர்.எஸ்.பாரதி தொடங்கி வைக்கின்றனர்

சென்னை, மார்ச் 4 - இந்தியா போற்றும் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71-வது பிறந்த நாளை முன்னிட்டு வருடம் முழுவதும் சுற்றுச் சூழலை பாதுகாக்க மரம் நடும் நிகழ்ச்சி துவக்கம் கஞ்சிபுரம் வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் கே.ஆர்.ஆனந்தன் தலைமையில் நாளை (5.3.2024) காலை 9 மணிக்கு முகலிவாக்கம் அரசு உயர் நிலைப் பள்ளியில் நடைபெறுகிறது.

ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன் வரவேற்பிலும், பகுதிச் செயலாளர் என்.சந்திரன், . கோல்டு டி.பிரகாஷ் , ஜெ. செல்வேந்திரன், கே.ஆர். ஜெகதீஸ்வரன் , அ.வேலவன், பூங்கொடி ஜெகதீஸ்வரன், சுற்றுச்சூழல் மாவட்ட நிர்வாகிகள் கு.ப.முருகன், பா.பிரசாத், டி.எம்.உமாசங்கர்,, எகைப.டேனியல், சந்துரு, ஆ.இராஜன்,ஆர். பெருமாள், ,ஜா. முனிரத்தினம், ।கே.ஜி.சந்தோஷ்கண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்- அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக அமப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி ஆகியோர் மரத்தை நட்டு நிகழ்ச்சியை துவக்கி வைக்கின்றனர்.

இதில் மீ.அ.வைதியலிங்கம், இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., மாவட்ட நிர்வாகிகள் த. துரைசாமி, து.மூர்த்தி, வெ.விஸ்வநாதன், வீ.தமிழ்மணி, மாவட்ட ஊராட்சித் தலைவர் படப்பை ஆ. மனோகரன், ஆலந்துர் தொகுதி பொறுப்பாளர், இரா.நரேந்திரன், ஆதிமாறன், தாம்பரம் மேயர் க. வசந்தகுமாரி, கோ.காமராஜ், ஜி.சி.அன்புசெழியன், க. அன்புசெல்வன், தொ.மு.ச. இரா.பொன்னுராம், அ. தமிழ்மாறன், என்.நவீன், சாய் ஜெயகாந்த், பாரதி ,

பகுதி கழக செயலாளர்கள் எஸ்.சேகர், வே.கருணாநிதி, த.ஜெயக்குமார், இ.ஜோசப் அண்ணாதுரை, எஸ்.இந்திரன், டி.காமராஜ், ஆ.நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், ஆர்.சுரேஷ், ஒன்றிய நகர செயலாளர்கள் எல். இதயவர்மன், பையனூர் மு.சேகர், ந.கோபால் ,எஸ். டி.கருணாநிதி, ஏ.வந்தே மாதரம், பி.சந்தானம், ஜி. கே.விவேகானந்தன்(எ)ரவி, ஜெ.சண்முகம், என்.நரேந்திரன், டி.பாபு , எஸ்.ஐபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொள்கின்றனர்.

மாவட்ட சுற்றுச்சூல் அணி துணை அமைப்பாளர் வாசிம்ராஜா, முகலி ம.மணிகண்டன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

ஒருங்கிணைந்த வணிகவரி - பதிவுத்துறை அலுவலக வளாக கூட்ட அரங்கில்

அனைத்து துணை பதிவுத்துறைத் தலைவர்கள் ஆய்வுக் கூட்டம்!

வணிகவரி - பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, மார்ச் 4- வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமையில் நேற்று (02.03.2024) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை அலுவலக வளாகக் கூட்டரங்கில் 2024ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத் துறை தலைவர்கள், மாவட்டப் பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர் / தனித் துணை ஆட்சியர் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோரின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தின்போது பதிவுத்துறையில் பணியின் போது உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுகள் 7 நபர்களுக்கு கருணை அடிப்படையில் அரசு பணி நியமன ஆணைகளை அமைச்சர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசுச் செயலாளர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.,- ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. முன்னிலையில்

ஆர்.கே.நகர் தொகுதியில் அ.தி.மு.க.வினர் 50 பேர் கழகத்தில் இணைந்தனர்!

இரா.லட்சுமணன் - எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் - கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 4 ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதியில் அ.தி.மு.க. வடசென்னை மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி அவைத்தலைவர் ஆர்.ராஜா, வடசென்னை மாவட்ட மகளிர் அணி துணை செயலாளர் ஆர். பத்மா, முன்னாள் அம்மா பேரவை செயலாளர் த.ஏழுமலை, மகளிர் அணியை சேர்ந்த ஆர்.சரஸ்வதி, சங்கரி, அ.ம.மு.க.வை சேர்ந்த மரியசூசை ஆகியோர் தலைமையில் 50க்கு மேற்பட்ட நபர்கள் அ.தி.மு.க.விலிருந்து விலகி, தங்களை திராவிட முன்னேற்ற கழகத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபினேசர் ஆகியோர் முன்னிலையில் இணைத்துக் கொண்டனர்.

கழகத்தில் இணைந்தவர்களை மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. ஆகியோர் சால்வை அணிவித்து வரவேற்றனர்.

இந்நிகழ்வில் ஆர்.கே.நகர் பகுதி செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், மாவட்ட அவைத்தலைவர் ஆர்.வெற்றிவீரன், மண்டல குழுத்தலைவர் நேதாஜி.யு.கணேசன், பகுதி நிர்வாகிகள் என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.சதிஷ்குமார், மாஸ்.டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிடசெல்வி, பி.சீனிவாசன், வட்ட கழகத்தின் செயலாளர்கள் ஆர்.ஏ.எம்.சசிகுமார், ப.கோதண்டம், ந.நாகராஜன், தேவன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் இர.பொன் இளவரசன், இ.ரவிக்குமார், எஸ்.வி.ரவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் 71வது பிறந்த நாளையொட்டி செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் மார்ச் 1 அன்று பிறந்த 19 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து தாய்மார்களுக்கு பழங்கள் மற்றும் ஊட்டச்சத்து தொகுப்புகளை குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், தலைமை செயற்குழு உறுப்பினர் க.அன்புச்செல்வன், நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன், ஜெ.சண்முகம், நகர மன்ற தலைவர் தேன்மொழி நரேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

ஏ.எம்.வி.பிரபாகர ராஜா எம்.எல்.ஏ.நிகழ்ச்சி ஏற்பாடு! சென்னை தெற்கு மாவட்ட

தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கருத்தரங்கம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்!

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தலைமையேற்கும் கருத்தரங்கில் ரெ.சண்முகவடிவேல் - மா.இராமலிங்கம் - சுந்தர ஆவுடையப்பன் - எழிலரசி பங்கேற்பு!

சென்னை, மார்ச். 4 - சென்னை தெற்கு மாவட்டதி.மு.க.இளைஞர் அணி சார்பில் கழகத் தலைவர்,தமிழ்நாடுமுதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டுஇன்று(4.3.2024 திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு, எம்.ஜி.ஆர்.நகர் மார்க்கெட், கலைஞர் கருணாநிதிநகரில்நடைபெறுகிறது.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர்ஏ.எம்.வி.பிரபாகர ராஜா தலைமை வகிக்கிறார்.

க.தனசேகரன் எம்.சி, கே.கண்ணன் எம்.சி, மு. இராசாஎம்.சி,வாசுகிபாண்டியன்,உ.துரைராஜ்,பி.எஸ். முருகேசன், எஸ்.டி.தங்கராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சோ.செந்தில்குமார், மு.அன்பழகன், எம்.விநாயகமூர்த்தி, ச.சங்கர் கணேஷ், ஆர்.கிருஷ்ணகுமார், ஜெ.இ.பாண்டியன், கா.வீ. தியாகராஜன், இராமாபுரம் செ.ரவி, கோட்டூர் எஸ்.பிரகாஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிகழ்ச்சியை துவக்கி வைக்கிறார்.

தமிழ் அறிஞர்கள் அரங்கம் எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் கருத்தரங்கிற்குதலைமைவகிக்கிறார்.

திருவாரூர் ரெ.சண்முகவடிவேல், புலவர் மா.இராமலிங்கம், முனைவர் சுந்தர ஆவுடையப்பன், திருவண்ணாமலை எழிலரசி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

கவிஞர் இளையகம்பன் நெறி ஆற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில்தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ, காரம்பாக்கம்க.கணபதி எம்.எல்.ஏ, துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ். ஜோயல்,காசிமுத்துமாணிக்கம், வே.கௌதமன், கோ ஸ்டாலின், எம்.கிருஷ்ணமூர்த்தி

மற்றும் பகுதிக் கழகச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழகநிர்வாகிகள்,அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பா ளர்கள், கழக முன்னோடிகள்பலர்கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

கலைஞர்நகர் தெற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் கே.சதீஷ்கண்ணன், கலைஞர்நகர் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் வாட்டர் எஸ்.விஜயகுமார் நன்றி கூறுகின்றனர்.